பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(27.12.2023 முதல் 31.12.2023 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 103 (12) PJN/GKMS/2023 தேதி: 26.12.2023

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (21.12.2023 முதல் 25.12.2023 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -31.12.2023 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 21/12 | 22/12 | 23/12 | 24/12 | 25/12 | | நாள்-1 27/12 | நாள்-2 28/12 | நாள்-3 29/12 | நாள்-4 30/12 | நாள்-5 31/12 |
| 53.2 | 3 | 0 | 0 | 3 | மழை (மி.மீ) | 1 | 10 | 12 | 12 | 7 |
| 28 | 29 | 29 | 29 | 31 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 27 | 26 | 26 | 25 | 25 |
| 24 | 22 | 22 | 22 | 23 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 23 | 22 | 21 | 21 | 20 |
| 8 | 5 | 5 | 4 | 6 | மேக மூட்டம் | 5 | 6 | 8 | 8 | 8 |
| 84-96 | 82-94 | 72-94 | 88-91 | 76-95 | ஈரப்பதம் (%) | 80-90 | 80-90 | 80-90 | 80-90 | 80-90 |
| 4 | 4 | 3 | 3 | 4 | காற்றின் வேகம் (கி.மீ) | 26 | 22 | 22 | 22 | 20 |
| வடக்கு வட கிழக்கு | வடக்கு வட கிழக்கு | வடக்கு வட கிழக்கு | வடக்கு வட கிழக்கு | வடக்கு வட கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (27.12.2023 முதல் 31.12.2023 வரை):**

- டிசம்பர் 27 லிருந்து 31 வரை லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.
- அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்ப நிலை 20-27 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 80-90 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 20-26 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது . காற்றானது பெரும்பாலும் வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.
- டிசம்பர் 31 லிருந்து ஜனவரி 06 வரை மழை (2.72 மி.மீ) இயல்பிற்கு அதிகமாகவும், அதிகபட்ச வெப்பநிலை (28.87 டி.செ) மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (20.45 டி.செ) இயல்பாக இருப்பதற்கும் வாய்ப்புள்ளது.

## வேளாண் அறிவுறை

| பயிர்கள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| நெல் | தூர் விடும் பருவத்திலிருந்து பூங்கொத்து வெளிவரும் பருவம் வரை | நெல் வயலில் தேவைக்கு அதிகமாக உள்ள நீரை வடிக்கட்டவும். இலை வழி ஊட்டமாக 1% யூரியா +0.5 % ஜின்க் சல்பேட் (ஹெக்டருக்கு 5 கிலோ யூரியா + 2.5 கிலோ ஜின்க் சல்பேட்டை 500 லிட்டர் தண்ணீருடன் கலக்கவும்) தெளிப்பதன் மூலம் பயிர் வளர்ச்சியை ஊக்கப்படுத்தலாம்.<br>மேலுரமாக 50 கிலோ யூரியா மற்றும் 20 கிலோ பொட்டாஷ் உடன் 10 கிலோ வேப்பம் புண்ணாக்கை நெற் வயலில் இடவும். |

| | | |
|---|---|---|
| | | நெற் பயிரில் இலை சுருட்டுப் புழுக்களை கட்டுப்படுத்த டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் ஒட்டுண்ணிகளை 5cc (ஹெக்டேருக்கு 1,00,000) என்ற அளவில் 37, 44, 54 ஆகிய நாட்களில் வெளியிடலாம்.<br>தழைச்சத்துக்களை அளவுக்கு அதிகமாக படுத்துவத்தை தவிர்க்க வேண்டும்.<br>விளக்குப் பொறியை பயன்படுத்தி அந்து பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம்.<br>நடவுவயலில் டி(T) வடிவ குச்சிகளை வைத்து பூச்சிகளை உண்ணும் பறவைகளை பயன்படுத்தி பூச்சிகளை கட்டுப்படுத்தலாம் அல்லது கார்டேப்ஹைட்ரோகுளோரைடு (cartaphydrochloride 50% SP) லிட்டருக்கு 2 கிராம் அல்லது ஃப்ளுபென்டையமைடு (flubendiamide 20 WG) லிட்டருக்கு 0.25 கிராம் அல்லது தையமீதாக்சம் (thiamethoxam 25 WG) லிட்டருக்கு 0.2 கிராம் என்ற அளவில் தெளிக்கலாம். |
| **கால்நடை** | **ஈக்கள்** | இந்த மழை நாட்களில் கால்நடைகளில் ஈக்க ளால் தொல்லைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஈக்கள் சர்ரா மற்றும் ஈ காய்ச்சல் போன்ற நோய்களை பரப்புகின்றன. விலங்குகளுக்கு இரத்த சோகை, கடுமையான அசௌகரியம், கடிக்கும் இடங்களில் ஒவ்வாமை மற்றும் உற்பத்தித்திறனில் குறிப்பிடத்தக்க இழப்பை ஏற்படுத்தும். ஈக்களால் ஏற்படும் தொல்லைகளை குறைக்க பின்வரும் முறைகளை நடைமுறைப்படுத்தலாம்.<br>எரு மற்றும் சிறுநீரை கால்நடைத் தொழுவத்தில் இருந்து தூரத்தில் அப்புறப்படுத்துவது வழக்கமாக செய்யப்பட வேண்டும்.<br>குறிப்பாக மாலை நேரங்களில் பச்சை இலைகளை (வேம்பு இலை) கொண்டு கொட்டகையில் மூட்டம் போடலாம்.<br>கடிக்கும் ஈக்களை விரட்ட வேப்ப எண்ணெய் போன்ற இயற்கை விரட்டிகளை முழு உடலையும், குறிப்பாக அடிவயிறு மற்றும் கால்களில் தடவ வேண்டும். |
| **ஆடு** | **வயரல் என்டரிடிஸ் கழிச்சல் நோய்** | மழைக்காலத்தில் ஆடுகளுக்கு வயரல் என்டரிடிஸ் எனப்படும் கழிச்சல் நோய் அதிகமாக பரவ வாய்ப்புள்ளது. கழிச்சல் ஏற்படும் பட்சத்தில் ஆடுகளை மேய்ச்சலுக்கு அனுப்பாமல் உடனே கால்நடை மருத்துவரை அனுகவும். |
| **கோழி** | **ரத்தக் கழிச்சல் நோய்** | ஆழ்கூள முறையில் கோழி வளர்ப்பவர்கள் மழைக்காலத்தில் ரத்தக் கழிச்சல் நோய் வராமல் தடுக்க ஆழ்கூளத்தில் அதிக ஈரம் சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும் 100 சதுர அடிக்கு 5 கிலோ சுண்ணாம்புத் தூளை இட்டு நன்றாகக் கிளறி விட வேண்டும். தேவைப்பட்டால் புது ஆழ்கூளம் ஏற்படுத்த வேண்டும். |

**குறுஞ்செய்தி:** அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசான மழைக்கு வாய்ப்புள்ளதால் பயிர்களுக்கு நீர்ப்பாய்ச்சுவதை ஒத்திவைக்கலாம்.

**முதல்வர்**